(அ) மதுரை வடக்கு தாலூகா குளமங்கலம் கிராமத்தில் போடப்பட்ட தடையுத்தரவால் ஏற்பட்டுள்ள பீதியும் பரபரப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருமதி கே. பி. ஜானகியம்மாள் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"மதுரை வடக்குத் தாலூகா குளமங்கலம் கிராமத்தில் ஊராட்சி மன்றத் தலைவருக்கும், ஒருசில விவசாயிகளுக்கும் நடந்த வாய்த் தகராறைக் காரணமாகக் கொண்டு 15-2-1970 அன்று அக்கிராமத்தில் 144 தடை உத்தரவு போட்டும், லாரியில் போலீஸ் கொண்டு இறக்கி முகாமிட்டுள்ளது. இதனால் கிராமத்தில் பொது மக்கள் நடமாடவும், அறுவடைக்குச் செல்லவும் முடியாது பீதியும், பரபரப்பும் அடைந்துள்ளார்கள். ஆகையால் இந்தப் பரபரப்பான பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டும்" என்று கோரியுள்ளார்கள்.

இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது, மேலும் நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து கூற வாய்ப்பிருப்பதால், இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

(ஆ) கச்சத் தீவிலுள்ள புனித அந்தோனியார் கோவில் திருவிழாவிற்கு தமிழகக் கத்தோலிக்கர் செல்ல இலங்கை அரசு விதித்துள்ள கட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத்தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத் தீவில் உள்ள புனித அந்தோனியார் கோவிலில் நடக்கும் திருவிழா வைபவத்திற்கு தமிழக கத்தோலிக்க மக்கள் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடு தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்தும் அவர்கள் புனித அந்தோனியார் கோவிலுக்கு வழக்கம்போல் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது." ஆகவே சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, இந்தியாவிற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்தக் கச்சத் தீவில் வருடா வருடம் மார்ச் மாதம் அங்குள்ள புனித அந்தோனியர் கோவிலில் திருவிழா நடப்பதும், தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான கத்தோலிக்கப் பெருமக்களும் மற்றவர்களும் அங்கு சென்று திருவிழாவில் பங்கு

கொள்வதும் வழக்கமாக நடந்து கொண்டு வருகிற ஒரு விஷயமாகும். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கச்சத் தீவில் உள்ள அந்தக் கோவிலுக்கு தமிழகத்தில் உள்ளவர்கள் செல்வதற்கு சிற்சில சங்கடங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. குறிப்பாக, அங்கு கள்ளக்கடத்தலைக் கண்டுபிடிக்க இலங்கை போலீஸார் ரோந்து வருகிறார்கள் என்ற முறையை வைத்துக்கொண்டு இங்கிருந்து எந்தத் தமிழரும் சுயமாக அங்கு போய் அந்தக் கோவிலில் பிரார்த்தனையில் கலந்து கொள்ளக் கூடாது என்ற நிலையை ஏற்படுத்தி இங்குள்ளவர்கள் அங்கு செல்லும்போது அநியாயமாகவும், அக்கிரமமாகவும் தடுக்கப்படுகிறார்கள் என்று மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. நேற்று பத்திரிக்கைகளில் பார்த்தோம். இங்குள்ள குருமார்கள் எல்லாம் அங்கு சென்று விட்டார்கள் என்றும் ஆனால் கோவிலிற்குச் சென்று வணங்கக் கூடிய மக்கள் செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும் பத்திரிக்கைகளில் பார்க்கிறோம். அந்தத் திருவிழா மார்ச் மாதம் அங்கு நடக்கும் போது பெருவாரியான மக்கள் செல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படிச் செல்லுகிறவர்கள் திருவிழாவைப் பயன்படுத்தி கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்றால், அது குறித்து அரசாங்கம் கண்காணிப்பு செய்யவேண்டியது நிச்சயம் அவசியமாகும். ஆனால் சாதாரணமாக கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை நடத்தி வருகிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் ஒரு கடமையாகும்.

இந்த கச்சத் தீவு மத்ய அரசுக்குச் சொந்தமாகயிருந்தாலும்சரி அல்லது கச்சத் தீவு யாருக்குத்தான் சொந்தம் என்ற உரிமை இன்னும் முடியாமல் இருந்தாலும்சரி கோவிலுக்குச் சென்று வணங்கிவிட்டு வருகிற உரிமையை தமிழக மக்களுக்கு இந்த அரசு வாங்கித் தரவேண்டும். இதுபற்றி முன்பு ஒரு முறை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த அவையில் இந்தப் பிரச்சினை எழுப்பப் பட்டு அதை விரிவாக விவாதிக்காமல் நாம் விட்டு விட்டோம். அப்படி விரிவாக விவாதிக்காமல் விட்டுவிட்ட காரணத்தினால், மத்திய அரசு இதில் அதிகக் கவனம் எடுத்துக்கொள்ளவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, மத்திய அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதற்கு, கள்ளக்கடத்தல் போன்ற விஷயங்களை மட்டும் வெறும் காரணமாகச் சொல்லி கோவிலுக்குச் செல்வோரை தடுக்காமலிருக்க தமிழக அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவேதான் அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த கச்சத் தீவு பிரச்சினை உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் அது யாருக்குச் சொந்தம் என்பது நம்மைப் பொறுத்த வரையில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. அது நிச்சயமாக

நமக்குத்தான் சொந்தம் என்ற வகையில் நாம் வாதாடிக் கொண்டு வருகிறோம். அந்த உரிமையை நாம் வலியுறுத்திக் கூறிக் கொண்டு வருகிறோம். இது ஏதோ நமக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு தகராறான சூழ்நிலையை உருவாக்கும் என்ற அளவில் அல்ல. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே நல்ல நட்புறவு இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில்தான், அதே நேரத்தில் நம் உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை என்ற அளவில் கச்சத் தீவு நமக்குத்தான் சொந்தம் என்பதை வலியுறுத்தி வருகிறோம். இந்த அவையில் அதுபற்றி நாம் ஒருமுறை விவாதித்திருக்கிறோம். அதற்குப் பிறகும் மத்திய அரசிடம் அதை வலியுறுத்தி நாம் எடுத்துக்கூறியும் எழுதியும் வந்திருக்கிறோம். இப்போது அங்கு அந்தோனியார் கோவில் திருவிழா வைபவத்திற்கு தமிழக கத்தோலிக்க மக்கள் செல்ல முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டு அரசாங்கம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து அந்த நிலை பற்றிய விளக்கங்களை அவர்களிடத்தில் கேட்டுக் கொண்டு இதுபற்றி மத்திய அரசுக்கு உடனடியாக எழுதி உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்ற நிலையை மட்டும் இங்கே நான் விளக்கி, ஆகவே அவையை ஒத்திவைத்து இதை விவாதிப்பதற்கு தேவை இல்லை என்ற கருத்தினைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து இதை விவாதிக்கவேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுகிற காரணத்தினால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) சிவாஜி சேனை தொண்டர்கள், பம்பாயில் தமிழர், தென் இந்தியர் கடைகளை, சிற்றுண்டிசாலைகளை இவற்றை தாக்கியதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. மார்டின் அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"2—3—1970-ல் பம்பாயில் முழு அடைப்பு நடத்திய சிவாஜி சேனைத் தொண்டர்கள் பம்பாயில் உள்ள தமிழர்கள் கடைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள். சங்கிலிப் பகுதியில் தமிழர்கள் மற்றும் தென் இந்தியர்கள் நடத்தும் ஹோட்டல் மீது சிவாஜி சேனைத் தொண்டர்கள் கல்வீச்சு நடத்தியுள்ளனர். ஹோட்டல்களின் பூட்டுகளை உடைத்து கொள்ளை அடித்துள்ளார்கள். தமிழ்ப் பெருமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பம்பாயில் பெரும் நெருக்கடியும் பதட்ட நிலைமையும் ஏற்பட்டுள்ளது" ஆகவே சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டுமென்று கோரியுள்ளார்கள்.